**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 359** **நாள்: 03.11.2025**

**சென்னை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் (Special Intensive Revision) தொடர்பாக அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரமுகர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தலின்படி வாக்காளர் பட்டியல் **சிறப்பு தீவிர திருத்தம்** (Special Intensive Revision) தொடர்பாக சென்னை மாவட்டத்தில் அனைத்து **அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்களுடன்**, மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் தலைமையில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள், வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்கள்) ஆகியோர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் இன்று (03.11..2025) ரிப்பன் கட்டடக் கூட்டரங்கில் நடைபெற்றது.

சென்னை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி பல்வேறு கட்டங்களாக 28.10.2025 முதல் 07.02.2026 வரை நடைபெறுகிறது. வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் இப்பணிக்கான கணக்கெடுப்பு படிவம் (Enumeration Form) நாளை (04.11.2025) முதல் வீடு வீடாக வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டு, 04.12.2025-க்குள் மீள பெறப்படும். அந்தந்த வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வழங்கப்படும் இரட்டை படிவங்களை, பொது மக்கள் முழுமையாக பூர்த்தி செய்து கையொப்பத்துடன், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மீள வரும்போது சமர்ப்பித்திட வேண்டும். அவ்வாறு பெறப்படும் படிவங்களில் உள்ள வாக்காளர்களின் பெயர்கள் மட்டுமே வரைவு வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படும். எனவே, வாக்காளர்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு முழுமையாக ஒத்துழைப்பு நல்கி, இத்திருத்தப்பணியினை சிறப்பாக முடித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், சிறப்பு தீவிர திருத்தம் (Special Intensive Revision) தொடர்பாக சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட தொகுதிவாரியான வாக்குச்சாவடி முகவர்களுடனான(BLAs) ஆலோசனை கூட்டம் சம்மந்தப்பட்ட வாக்குப்பதிவு அலுவலர்களால் நாளை(04.11.2025) பின்வரும் இடங்களில் நடைபெற உள்ளது எனவும், மேலும், சிறப்பு தீவிர திருத்தப்பணிகள்

குறித்த சந்தேகங்கள் ஏதும் இருப்பின், பின்வரும் வாக்குப்பதிவு அலுவலர்கள் அலுவலக உதவி மைய தொலைபேசி எண், பெருநகர சென்னை மாநகராட்சி தேர்தல் அலுவலக தெலைபேசி எண் 044-25619547 மற்றும் கட்டணமில்லா தேர்தல் கட்டுப்பாட்டு தொலைபேசி எண் 1950 ஆகியவற்றை வாக்காளர்கள் தொடர்பு கொள்ளலாம் என்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**BOOTH LEVEL AGENTS (BLA) - DATE,VENUE & TIMINGS DETAILS**

| S.NO | Assembly Consistuency Number & Name | Venue | Help desk contact Details | Date & Schedule Timing |
|---|---|---|---|---|
| 1 | 11-Dr.Radhakrishnan Nagar | Thangamayil Thirumana Mandapam<br>T.H Road, Tondiarpet, Chennai - 600021 | 044-25951083 | Date : 04.11.2025<br>Slot I: 10.00 am to 11.00am<br>Slot II: 11.00 am to 12.00Noon<br>Slot III: 12.00 Noon to 1.00pm<br>Slot IV: 1.00 PM to 2.00pm |
| 2 | 12-Perambur | JRK Mahal No. 1, TVK Link Roak, Krishnamoorthy Nagar, Kodungaiyur, Chenani - 600118 | 044-25961199 | Date : 04.11.2025<br>Slot I: 10.00 am to 11.00am<br>Slot II: 11.00 am to 12.00Noon<br>Slot III: 12.00 Noon to 1.00pm<br>Slot IV: 1.00 PM to 2.00pm |
| 3 | 13-Kolathur | Thiruvalluvar Kalyana Mandapam, 29, Karthikeyan Rd, Periyar Nagar West,<br>Perambur, Chennai, 600082 | 044-26749990 | Date : 04.11.2025<br>Slot I: 10.00 am to 11.00am<br>Slot II: 11.00 am to 12.00Noon<br>Slot III: 12.00 Noon to 1.00pm<br>Slot IV: 1.00 PM to 2.00pm |
| 4 | 14-Villivakkam | Dr.Ambedkar Auditorium.(Kambar Arangam) ICF North Colony, Villivakkam, Chennai 600038 | 044-26640067 | Date : 04.11.2025<br>Slot I: 10.00 am to 11.00am<br>Slot II: 11.00 am to 12.00Noon<br>Slot III: 12.00 Noon to 1.00pm<br>Slot IV: 1.00 PM to 2.00pm |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | 15-Thiru-Vi-Ka-Nagar | Lakshmi Mahal & Mahesh Mahal, 54, Manikkam Steert ,Perambur Barracks Rd, Purasaiwakkam, Chennai,600007 | 044-26741802 | Date : 04.11.2025<br>Slot I: 10.00 am to 11.00am<br>Slot II: 11.00 am to 12.00Noon<br>Slot III: 12.00 Noon to 1.00pm<br>Slot IV: 1.00 PM to 2.00pm |
| 6 | 16-Egmore | Siraj Mahal,No.14,Whannels Road,Egmore,Chennai-08 | 044-25206655 | Date : 04.11.2025<br>Slot I: 10.00 am to 11.00am<br>Slot II: 11.00 am to 12.00Noon<br>Slot III: 12.00 Noon to 1.00pm<br>Slot IV: 1.00 PM to 2.00pm |
| 7 | 17-Royapuram | MKS Mahal, 75, Cemetery Road,Old Washermenpet,chennai-21 | 044-25209269 | Date : 04.11.2025<br>Slot I: 10.00 am to 11.00am<br>Slot II: 11.00 am to 12.00Noon<br>Slot III: 12.00 Noon to 1.00pm<br>Slot IV: 1.00 PM to 2.00pm |
| 8 | 18-Harbour | Hayath Mahal, 196,Prakasam road,Chennai-01 | 044-25206655 | Date : 04.11.2025<br>Slot I: 10.00 am to 11.00am<br>Slot II: 11.00 am to 12.00Noon<br>Slot III: 12.00 Noon to 1.00pm<br>Slot IV: 1.00 PM to 2.00pm |
| 9 | 19-Chepauk-Thiruvallikeni | Jain Kalyana Mandapam108, Pillaiyar Koil St, Ellis Puram, Padupakkam, Triplicane, Chennai, Tamil Nadu 600005 | 044-28170738 | Date : 04.11.2025<br>Slot I: 10.00 am to 11.00am<br>Slot II: 11.00 am to 12.00Noon<br>Slot III: 12.00 Noon to 1.00pm<br>Slot IV: 1.00 PM to 2.00pm |
| 10 | 20-Thousand Lights | Corporation Community Hall Giriyappa Road,Teynampet, chennai-18. | 044-28174775 | Date : 04.11.2025<br>Slot I: 10.00 am to 11.00am<br>Slot II: 11.00 am to 12.00Noon<br>Slot III: 12.00 Noon to 1.00pm<br>Slot IV: 1.00 PM to 2.00pm |
| 11 | 21-Anna Nagar | Amma Arangam, Shenoy Nagar, Chennai 30 | 044-26640067 | Date : 04.11.2025<br>Slot I: 10.00 am to 11.00am<br>Slot II: 11.00 am to 12.00Noon<br>Slot III: 12.00 Noon to 1.00pm<br>Slot IV: 1.00 PM to 2.00pm |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | 22-Virugampakkam | Sri Kamatchi Mahal ,134-C,Arcot Road,Saligramam,Chennai-93 | 044-24838968 | Date : 04.11.2025<br>Slot I: 10.00 am to 11.00am<br>Slot II: 11.00 am to 12.00Noon<br>Slot III: 12.00 Noon to 1.00pm<br>Slot IV: 1.00 PM to 2.00pm |
| 13 | 23-Saidapet | Greater Chennai Community Hall CHAKRAPANISTREET, MADUVINKARAI GUINDY, CHENNAI-600 032 | 044-24425963 | Date : 04.11.2025<br>Slot I: 10.00 am to 11.00am<br>Slot II: 11.00 am to 12.00Noon<br>Slot III: 12.00 Noon to 1.00pm<br>Slot IV: 1.00 PM to 2.00pm |
| 14 | 24-Thiyagarayanagar | Annai Anjukam Marriage hall,20, Dr Ambedkar Rd, Kamarajar Colony, Dr.Subbaraya Nagar, Kodambakkam - 24 | 044-24801959 | Date : 04.11.2025<br>Slot I: 10.00 am to 11.00am<br>Slot II: 11.00 am to 12.00Noon<br>Slot III: 12.00 Noon to 1.00pm<br>Slot IV: 1.00 PM to 2.00pm |
| 15 | 25-Mylapore | SIET College Auditorium,K.B.Dasan Road,Teynamet,chennai-18. | 044-28170738 | Date : 04.11.2025<br>Slot I: 10.00 am to 11.00am<br>Slot II: 11.00 am to 12.00Noon<br>Slot III: 12.00 Noon to 1.00pm<br>Slot IV: 1.00 PM to 2.00pm |
| 16 | 26-Velachery | Rajalakshmi Kalayana Mandapam No.205 Velachery Road Dhandeeswaran nagar Main Road Velachery chennai-600042 | 044-24425961 | Date : 04.11.2025<br>Slot I: 10.00 am to 11.00am<br>Slot II: 11.00 am to 12.00Noon<br>Slot III: 12.00 Noon to 1.00pm<br>Slot IV: 1.00 PM to 2.00pm |

இக்கூட்டத்தில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., (இணை ஆணையாளர் (கல்வி), திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., (சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர்), திரு.ம.பிரதிவிராஜ், இ.ஆ.ப., (துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி), திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., (துணை ஆணையாளர் (பணிகள்), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு வட்டார துணை ஆணையாளர்), திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., (தெற்கு வட்டார துணை ஆணையாளர்), மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்கள்) திரு.கு. சரவணமூர்த்தி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், வாக்காளர் பதிவு அலுவலர்கள்/உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**